www.Padasalai.Net www.TrbTnpsc.com

HSL
**12** - ஆம் வகுப்பு
நேரம் : 3.00 மணி

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023
## தமிழ்

மதிப்பெண்கள் :90

### பகுதி - I

**குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 1 X 14= 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. 'தமிழின் பண்பாட்டு வெளிகள்' - என்னும் நூலின் ஆசிரியர்
அ) கி.ராஜநாராயணன் ஆ) தி.சு. நடராசன் இ) உத்தம சோழன் ஈ) பூமணி

3. தமிழில் திணைப்பாகுபாடு ...... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட் குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க் குறிப்பு ஈ) எழுத்துக் குறிப்பு

4. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது ....
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்

5. இராமன் முறையே, ஐந்து, அறு, ஏழாவதாக யாரை எல்லாம் சகோதரனாக ஏற்றான் அ) சடாயு, குகன், வாலி
ஆ) குகன், சுக்ரீவன், வீடணன் இ) குகன், சவரி, பரதன் ஈ) இவர்களில் எவருமில்லை

6. எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது
அ) தனிக் குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூக முறை

7. "காவினெம் கலனே: சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக் கருவி இ) இசைக் கருவி ஈ) வேளாண் கருவி

8. 'மாமயிலை' - இலக்கணக் குறிப்பு யாது?
அ) உரிச்சொற்றொடர் ஆ) பண்புத் தொகை இ) வினைத் தொகை ஈ) பெயரெச்சம்

9. *பொருத்துக.*

| | | |
|---|---|---|
| அ) ஆமந்திரிகை | - | 1) பட்டத்து யானை |
| ஆ) அரசு உவா | - | 2) மூங்கில் |
| இ) கழஞ்சு | - | 3) இடக்கை வாத்தியம் |
| ஈ) கழை | - | 4) எடை அறிவு |

அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

10. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் ......
அ) எட்டு ஆ) ஏழு இ) பத்து ஈ) நூறு

11. முச்சந்தி இலக்கியம் என்பது
*கூற்று 1:* கதை வடிவிலான வடிவம் உடையது
*கூற்று 2 :* பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது.
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

12. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின் ...... என்ற குறட்பா
பின்வருவனவற்றுள் எவற்றை உணர்த்துகிறது.
அ) நேர மேலாண்மை ஆ) வேளாண் மேலாண்மை இ) வணிக மேலாண்மை ஈ) நிருவாக மேலாண்மை

13. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதக மண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

14. 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' - என்னும் நூலின் ஆசிரியர் ...... அ) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
ஆ) ச.த. சற்குணம் இ) கா.சுப்பிரமணியர் ஈ) மயிலை.சீனி. வேங்கடசாமி

### பகுதி - II பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3 X 2 = 6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
16. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.
17. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியம் கூறும் காரணத்தை எழுதுக.
18. வசனம், கவிதை வேறுபாடு தருக.

### பிரிவு - 2

2 X 2 = 4

19. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
20. 'குலஷோவ் விளைவு' - விளக்கம் தருக.
21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

**பிரிவு - 3 எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை எழுதுக.** 7 X 2 = 14

22. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
அ) தலை, தளை, தழை ஆ) கான் - காண்

23. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*
அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
ஆ) வூட்டாண்ட வௌளயாண்ட கொயந்ததைய அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

24. *பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.*
அ) குமரன் வீடு பார்த்தேன் ஆ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்

25. *உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.*
அ) கிணற்றுத்தவளை போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனிபோல

26. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.*
அ) தொழுதனர் ஆ) வைத்து



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

27 ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி எழுதுக. அ) தனியாழி ஆ) பெருங்கடல்

28 தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) வானுயர காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன

ஆ) பனை மட்டையால் கூரை வேய்ந்திருந்தனர்.

29 பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.

அ) Demand Draft ஆ) Animation

**செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.** அ) பலகை ***(அல்லது)*** ஆ) தலைமை

30. காப்பியச் சிறப்புகள் சிலவற்றை எழுதுக.

## பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 X 4 = 8

31. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி ஒன்று விளக்குக.
34. 'ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**பிரிவு - 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 X 4 = 8

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. 'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' என்ற சிந்தாமணி வரி உணர்த்தும் கருத்தை விவரிக்க.
37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

**பிரிவு - 3 எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3 X 4= 12

39. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. ***(அல்லது)***
சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40. ***பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.***
அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை ***(அல்லது)*** ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

41. **கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**
1) கபிலன் திறமையானவர் என்று ..... ***(குமரன்)*** தெரியும்.
2) நேற்று முதல் ..... ***(அணை)*** நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
3) உங்களுக்கு ...... ***(யார்)*** நன்மை என நினைக்கிறீர்கள்.
4) முருகன் ..... ***(வேகம்)*** சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

42. **தமிழாக்கம் தருக.**

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assiting someone with a physically challenged etc are also other good habits of mine. To lead on a peaceful. I develop other good habits, writing, listening to music, dancing, singing etc are other such habits which fulfill the needs of my soul.

**காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பேச்சாளர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலைப் போராட்ட வீரர், இலக்கிய ஆய்வாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர் நாவலர் சோமசுந்தர பாரதியார். 'என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது' என்று வ.உ.சி பெருமிதத்துடன் இவரைக் குறிப்பிடுவார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். தசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர் சேரர் தாய்முறை, தமிழும் தமிழரும் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

**வினாக்கள் :** 1. சோமசுந்தர பாரதியாரின் பன்முக ஆளுமையைக் குறிப்பிடுக.
2. சோமசுந்தர பாரதியார் குறித்து வ.உ.சி எவ்வாறு குறிப்பிடுகிறார்?
3. தமிழ்த்துறைத் தலைவராகப் சோமசுந்தர பாரதியார் பணியாற்றிய பல்கலைக்கழகம் எது?
4. சோமசுந்தர பாரதியார் இயற்றிய நூல்கள் யாவை?

43. **இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்தினை எழுதி எவையேனும் மூன்று நயங்களை எழுதுக.**

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீ தான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

- பாரதிதாசன்

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.** 3 X 6 = 18

44. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க. ***(அல்லது)***
எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

45. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. ***(அல்லது)***
மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

46. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை? ***(அல்லது)***
மகா நடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6
அ) 'விண்வேறு'..... எனத் தொடங்கும் இதில் வெற்றி பெற பாடல். ஆ) 'தொடர்பு' - என முடியும் குறள்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com